*Kalanjiyam International Journal of Tamil Studies*
*An international, peer-reviewed quarterly academic research journal*
**ISSN: 2456-5148 (Online)**
**www.ngmtamil.in**

**களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.0 Multidisciplinary International
DOI: https://doi.org/10.63300/kijts10sp02.2026

**Vol. 10 No. 02, September 2026 (Special Issue) p 01-11** | Available online at: www.ngmtamil.in
Original Research Paper – Peer Reviewed

# சேக்கிழார் கற்பிக்கும் பக்திநெறி

## The Path of Devotion Taught by Sekkizhar

**முனைவர் சு.லலிதா**
தமிழ் இணைப்பேராசிரியர்
வேளாளர் பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரி
திண்டல், ஈரோடு – 12

**ABSTRACT**
Living beings have been classified based on their functions into categories ranging from those possessing a single sense to those with six senses. Having evolved from the five-sensed state to the six-sensed state, we humans ought to progress towards a 'seventh sense' rather than allowing our evolution to regress. The noble path lies in seeking and attaining true divine wisdom. Devotion, which initially arose from fear, has matured over time; today, it has reached a stage where human, social, and global unity are seen as achievable solely through devotion. Devotees like Sekkizhar, who were deeply immersed in such devotion, categorized the paths to attaining the Divine into two types: the path of intellect (Arivu Maargam) and the path of love (Anbu Maargam). This research paper examines these two paths through the lens of Sekkizhar's Periyapuranam.

**ஆய்வுச் சுருக்கம்**

உயிரினங்களின் செயல்பாடுகளுக்கு ஏற்ப அவற்றை ஓரறிவு முதல் ஆறு அறிவு வரை பகுத்துள்ளனர். இத்தகைய உயிரினப் பாகுபாட்டில் ஐந்தறிவிலிருந்து ஆறறிவை நோக்கி வளர்ந்த மனிதர்களாகிய நாம், ஏழாம் அறிவை நோக்கி வளர வேண்டுமே தவிர, நம்முடைய வளர்ச்சியானது மீண்டும் கீழ்நோக்கியதாக இருந்துவிடக் கூடாது. உண்மையான இறை ஞானம் என்பது எது என்பதைத் தேடி அதனை அடைவதே உயர்நெறி. ஆரம்பத்தில் பயத்தின் காரணமாக தோன்றிய இந்தப் பக்தியானது காலப்போக்கில் பண்பட்ட நிலையினை அடைந்து இன்று மனித ஒருமைப்பாடு, சமுதாய ஒருமைப்பாடு, உலக ஒருமைப்பாடு ஆகிய அனைத்தும் பக்தியால்தான் நிகழும் என்ற வளர்ந்த நிலையை அடைந்துள்ளது. இத்தகைய பக்தியில் திளைத்த சேக்கிழார் போன்ற பக்திமான்கள் இறைவனை அடையும் வழியை, அறிவு மார்க்கம் மற்றும் அன்பு மார்க்கம் என்று இரண்டு வகையாகப் பகுத்துள்ளனர். அந்த இரண்டு மார்க்கங்களையும் சேக்கிழாரின் பெரியபுராணம் கொண்டு ஆராய்வதாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.

**குறிப்புச் சொற்கள்**

கடவுள் - அன்பு மார்க்கம் - அறிவு மார்க்கம் - அவியுணவு – அருச்சணை.

© 2014 The Author(s). This open access article is distributed under a Creative Commons Attribution (CC-BY) license

**ஆய்வு அனுகுமுறை**

அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்துள்ள இளைவனை அடைகின்ற வழிகளைப் பெரியபுராணத்தில் எவ்வாளுறு சேக்கிழார் வகுத்துக்கூறுகின்றார் என்பதை ஆராய்ந்து விளக்குவதால் இந்த ஆய்வுக்கட்டுரையானது விளக்கமுறை ஆய்வாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு நோக்கம்**

இறைநிலையை அடைய இறை ஞானிகள் வகுத்துக்கூறிய மார்க்கங்களான அறிவு மார்க்கம் மற்றும் அன்பு மார்க்கம் ஆகியவற்றை ஆராயந்து விளக்குவதே இந்த ஆய்வின் நோக்கமாக அமைந்துள்ளது.

**முன்னுரை**

உலகில் உள்ள அனைத்து உயிரினங்களும் தங்களுக்குத் தெரிந்த வழிகளில் இறைவனை வணங்குகின்றன. எந்த மதமாயினும், எந்த உயிரினமாயினும் அவை மேற்கொள்ளும் வழிபாட்டில் முதன்மையாக இருப்பது அன்பு மட்டுமே. அன்பு ஒன்றே உயிரினங்களை மட்டுமின்றி இறைவனையும் நம்மோடு இணைக்கும் தன்மை கொண்டது. அறிவானது எவ்வளதான் மேலான செயல்களைச் செய்தாலும் அன்பின் வழியில் அதுவும் அடங்கும் தன்மை கொண்டது. அன்பு மேலெழும்போது அறிவு அடங்கிவிடும். இத்தகைய அன்பால் முழுமையாக நிறைந்த நிலையே இறைவன் விரும்பும் நிலை. இதையே சேக்கிழாரும் தன்னுடைய பெரியபுராணத்தில் கண்ணப்பர் புராணம் மூலம் விளக்குகின்றார். அந்த அறிவு மார்க்கத்தை எடுத்து இயம்புவதாக இவ்வாய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.

**பெரியபுராணம்**

செயற்கு அரிய செய்வர் பெரியர் என்னும் குறள் வரிக்கேற்ப அறுபத்து மூன்று நாயன்மார்கள் புரிந்த இறைப் பக்தியையும், தொண்டு நெறியையும் வரலாற்று முறையில் கூறும் நூலே பெரிய புராணம் (பெரியர் புராணம்) ஆகும். இந்நூல் பல்வேறு நாடு, ஊர், சாதி, தொழில் கொண்ட நாயன்மார்களுடைய வாழ்க்கையை விவரிக்கிறது. அக்காலச் சமுதாய வரலாற்றையும் எளிய, இனிய நடையில் எடுத்து சொல்கிறது. தில்லை அம்பலத்தே ஆடும் சிவபெருமான் உலகெலாம் என்று அடியெடுத்துக் கொடுக்கச் சேக்கிழார், பக்தி வளமும், இறையருட் திறமும் குறைவிலாது சிறக்குமாறு இலக்கியப் பெருங்களஞ்சியமாக, பெரிய புராணத்தை இயற்றி அருளினார்.

பெரிய புராணம் என்னும் பெருங்காப்பியம் தமிழகச் சூழலையும், 63 அடியார் பெருமக்களையும் மையமாகக் கொண்டு திகழ்கின்றது. இந்நூல் பெரும் பிரிவாக இரண்டு காண்டங்களையும், உட்பிரிவாக 13 சருக்கங்களையும் உடையது. 4286 விருத்தப் பாக்களையுடைய ஒரு பெரு நூலாகும்.கி.பி.11, 12-ஆம் நூற்றாண்டில் சோழநாட்டை ஆட்சி செய்த மன்னன் இரண்டாம் குலோத்துங்க சோழனாவான் (அநபாய சோழன்). அம்மன்னனின் அவையில் முதல் அமைச்சராகப்

பணி புரிந்தவர் சேக்கிழார். சோழ மன்னனின் வேண்டுகோளுக்கு இணங்க, சிவனடியார்களின் உயர்ந்த வாழ்க்கையைக் கதைப் பின்னலாகக் கொண்டு பெரிய புராணத்தைப் பாடினார் சேக்கிழார்.

சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையை முதல் நூலாகவும், நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியை வழிநூலாகவும் கொண்டு பெரிய புராணத்தைச் சார்பு நூலாகப் படைத்தார் சேக்கிழார்.

சிவனை முதன்மைப்படுத்தி வழிபடும் சமயமாகிய சைவத்தையும், அடியார்களது வரலாறு, தொண்டு நிறைந்த வாழ்வு, முத்தி பெற்ற நிலை ஆகியவற்றையும் விரிவாகவும் தெளிவாகவும் புலப்படுத்துவதே பெரிய புராணத்தின் நோக்கம் ஆகும்.

**சேக்கிழார்**

சென்னைக்கு அருகிலுள்ள குன்றத்தூர் என்னும் ஊரில் வேளாளர் மரபில் பிறந்தவர் அருண்மொழித் தேவர். இப்பெயரே அவருக்குப் பெற்றோர் இட்டு வழங்கியதாகும். சேக்கிழார் என்பது இவரது குடிப்பெயராகும். இவர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியதால், இரண்டாம் குலோத்துங்க சோழன் அவையில் முதலமைச்சராகப் பணிபுரிந்தார். அம்மன்னனின் வேண்டுகோளை ஏற்று, அடியார்களின் பெருமையை வரலாறாக எழுதினார். இந்நூலின் பெருமையை உணர்ந்த மன்னன், அவரைப் பட்டத்து யானையின் மீதேற்றி நகர்வலம் செய்து உத்தம சோழப் பல்லவராயன் என்னும் பட்டம் தந்து சிறப்பித்தான். இவருடைய காலம் கி.பி. 12 -ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். சிவத் தொண்டர்களின் வரலாற்றைச் சிறப்பித்த காரணத்தால் இவருக்குத் தொண்டர்சீர் பரவுவார் என்னும் சிறப்புப் பெயரும் உண்டு. கல்வெட்டுகள் இவரை மாதேவடிகள் என்றும், இராமதேவர் என்றும் சிறப்பிக்கின்றன. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ என்று இவரைப் பாராட்டுகின்றார்.

**கடவுள்**

கடவுள் என்பவர் அண்டம் முழுவதையும் படைத்துக் காப்பவர். அவர் எல்லாச் சக்திகளும் பொருந்தியவர். பிறப்பு-இறப்பு, இரவு-பகல், இன்பம்-துன்பம் போன்ற உலக வாழ்வியலில் தொடர்புடைய அனைத்தையும் கடந்து ஏகாந்தம் என்று கூறப்படும் மறைபொருளாக இருப்பவர். மேலும் அன்பு, புனிதம், கருணை என்பதன் மறுபொருள் கடவுள். பிரபஞ்சத்தின் படைப்பாளராகவும் பாதுகாவலராகவும் பிரபஞ்சமாகவும் இருப்பவர் கடவுள். இத்தகைய கடவுளை அறிவதற்காக ஒவ்வொரு ஆன்மாவும் பயணிக்கும் வழியே மதங்கள். இந்த மதங்கள் ஒவ்வொன்றும் தாங்கள் கற்றறிந்த ஆன்மீக அறிவுக்கு ஏற்ப கடவுள் பற்றி பல்வேறு விதமாக விளக்குகின்றன.

இந்து சமயத்தவர் கடவுளைப் பல உருவங்களிலும் பெயர்களிலும் வணங்குகின்றனர். இவ்வாறு வணங்கப்படும் இந்துக் கடவுள்கள் காலத்துக்குக் காலமும் இடத்துக்கு இடமும் பல

*Kalanjiyam International Journal of Tamil Studies*, Vol.10 No. 02, August 2026,
https://doi.org/10.63300/kijts10sp02.2026.01

வேறுபாடுகளுடன் காணப்படினும், இவை அனைத்தையும் ஒரே நெறிக்குள் இந்து சமயம் அடக்கி வைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இசுலாம் சமயத்தவர், கடவுள் ஒருவரே. அவரே அல்லாஹ். அவரைத் தவிர வேறு கடவுள் இல்லை என்ற நம்பிக்கை கொண்டவர்கள். அல்லாஹ் என்பது கடவுள் என்ற பொருள் கொண்ட பால் வேறுபாடு காட்டாத ஒரு படர்க்கை சொல். அது அரேபிய நாடோடிக் குழுக்கள் தங்கள் தெய்வத்தைக் குறிக்க பயன்படுத்திய சொல். அல்லாஹ் ஒருவரே இருக்கிறார். படைத்துப் பரிபாலிக்கும் ஆற்றல் அவருக்குரியது. அவருக்கு நிகராகவோ, துணையாகவோ யாரும் கிடையாது. வணக்கத்திற்குத் தகுதியானவர் அவர் ஒருவர் மட்டும்தான் என்கிறார்கள்.

கிறித்தவ சமயத்தவர் ஓர்இறைக் கொள்கையுடையவர்கள். இவர்கள் இயேசுவை மெசியா மற்றும் கிறிஸ்து என்று அழைப்பர். இவ்விரு சொற்களின் பொருளும் திருப்பொழிவுப் பெற்றவர் என்பதாகும்.

சமண சமயத்தவர்கள், மனித ஆன்மாவே கடவுள். மனித ஆன்மாவைத் தவிர வேறு கடவுள் இல்லை என்ற நம்பிக்கைக் கொண்டவர்கள்.

பௌத்த சமயத்தவரோ கௌதம புத்தரின் போதனைகளின் அடிப்படையில் வாழ்பவர்கள். அனைத்தையும் உருவகிக்கும், நிர்வகிக்கும் ஓர் உயரிய சக்தி உண்டு என்ற நம்பிக்கை இவர்களுக்கு இல்லை என்றாலும், தேவர்கள் என்ற ஓர் இனம் உண்டு என்பதிலும், அவர்களும் கர்ம வினைகளுக்குக் கட்டுப்பட்டவர்களே என்பதிலும் நம்பிக்கை கொண்டவர்கள்.

இவ்வாறு ஒவ்வொரு மதத்தவரும் கடவுள் குறித்த பல்வேறு கொள்கையைக் கொண்டவர்களாக இருப்பினும் இவர்கள் அனைவரும் சென்றடையும் இடம் வீடுபேறு என்ற ஒரே இடம்தான் என்பதில் துளியும் ஐயமில்லை.

**கடவுள் நம்பிக்கை**

இயற்கைச் சக்திகளைத் துணையாகக் கொண்டு வாழ்க்கையை நடத்திவந்த ஆரம்பகால மனிதர்களிடம் கடவுள் நம்பிக்கையானது பயத்தின் காரணமாகவே தோன்றியது. பலவகையான விலங்குகளை வேட்டையாடி விலங்குகளின் ரத்தத்தை மட்டுமே கண்டுவந்த மனிதனுக்கு ஒரு மரக்கிளைப் பட்டு அவன் முகத்தில் குருதி வடியவே, முதன்முதலில் வலியை உணர்கிறான். அப்போதுதான் குருதியை முதன்முதலில் பார்க்கிறான். அன்றுமுதல் பயந்து மரத்தினை வழிபடலாயினான். அதையே நாம் காலப்போக்கில் கந்து வழிபாடு(மர வழிபாடு) என்கிறோம்.

தன்னைவிட ஆற்றல்படைத்த சக்திகளால் தனக்குத் தீங்கு ஏற்பட்டுவிடக் கூடாது என்ற அச்சத்தின் காரணமாக ஆரம்பக்காலத்தில் மனிதனிடம் தோன்றிய கடவுள்; நம்பிக்கை, காலப்போக்கில் பண்பட்ட நிலையினை அடைந்து, தெளிந்த ஆன்மீகத்தில் தன்னுடைய வாழ்க்கை முழுதும் செலுத்தி இன்பம் அடையும் உயரிய நிலையை இன்று அடைந்துள்ளது.

**பக்தி**

மனிதனுடைய வாழ்க்கையை நன்னெறியில் செலுத்தப் பயன்படுவதே பக்தி. இந்தப் பக்தியினால் அறம், அன்பு, இரக்கம் என்னும் நல்லுணர்வுக் கூறுகள் மனிதனிடம் மிகுந்துக் காணப்படும்.

**அன்பு மார்க்கம் அறிவு மார்க்கம்**

இறைவனின் மேல் செலுத்தப்படும் இந்தப் பக்தியைச் சேக்கிழார் இரண்டு வகையாகப் பகுத்துக் கூறுகின்றார். ஒன்று கற்றறிந்தார் ஏத்தும் அறிவு மார்க்கம். இதில் மந்திரங்கள் மற்றும் இறைவனின் பெயர்கள் போன்றவை ஓங்கி ஒலிக்கப்படும். மற்றொன்றோ படிக்காத பாமரர் வணங்கும் அன்பு மார்க்கம். இதில் மந்திரங்களை உச்சரிக்கக்கூட தேவையில்லை. தன்னிடம் என்ன உள்ளதோ அதைக் கொண்டு, தனக்கு என்ன தெரிகின்றதோ அதன் அடிப்படையில் வழிபடுவதே அன்பு மார்க்கமாகும். இந்த அன்பு மார்க்கத்தை குழந்தை நிலை என்று குறிப்பிடுவர். கண்ணப்பர் புராணத்தில் இந்த இரண்டுவகையான மார்க்கத்தையும் சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார் என்பது கூர்ந்துநோக்கத்தக்கது.

அன்பு மார்க்கம் என்பது படித்தவர், படிக்காதவர் என்று அனைவரும் கடவுளை வழிபடும் எளிய மார்க்கம். தன்னைச் சார்ந்தவர்களோடு அன்பு செலுத்துவதிலேயே கடவுளைக் காண்பது இம்மார்க்கம்.

தான் விரும்பிய இறைவனை வழிபட எவ்விதக் கட்டுப்பாடுகளுமின்றித் தன்னுடைய மனதினை மட்டும் சாட்சியாக வைத்து வழிபடும் இந்த அன்பு மார்க்கத்தில் இறைவனுக்குப் படைக்கப்படும் பொருளை முதலில் பக்தன் சுவைத்து, அதில் சிறந்தது எது என்பதை எடுத்து இறைவனுக்குப் படைப்பான். இத்தகைய அன்புவழி மார்க்கத்தை மேற்கொண்டுதான் இறைவனுடைய அன்பைக் கண்ணப்பர் பெற்றுள்ளார் என்பதை சேக்கிழாரும்,

**"கொழுவிய தசைகள் எல்லாம்**
**கோலினில் தெரிந்து கோர்த்து அங்கு**
**அழலுறு பதத்தில் காய்ச்சிப்**
**பல்லினால் அதுக்கி நாவில்**
**பழகிய இனிமை பார்த்துப்**
**படைத்தஇவ் விறைச்சி சால**
**அழகிது நாயநிரே**
**அமுது செய்து அருளும் என்றார்"**

**(பெரியபுராணம் - கண்ணப்பர் பராணம் - பா- 125)**

என்ற பாடல் வரிகளிலும் மற்றும்,

**“செங்கண் வெள் விடையின் பாகர்**

**திண்ணனார் தம்மை ஆண்ட**

**அங்கணர் திருக்கா ளத்தி**

**அற்புதர் திருக்கை அன்பர்**

**தங்கண்முன் இடக்கும் கையைத்**

**தடுக்க மூன்று அடுக்கு நாக**

**அங்கணர் அமுத வாக்குக்**

**கண்ணப்ப நிற்க என்ற”**

**(பெரியபுராணம் - கண்ணப்பர் பராணம் - பா- 132)**

என்ற பாடல் வரிகளிலும் உணர்த்துகின்றார்.

இவ்வாறு அன்பு மார்க்கத்தில் வழிபட்ட கண்ணப்பரைச் சிவபெருமான் ஏற்றுக்கொண்ட தன்மையினை, அரு சோமசந்தரம் அவர்கள்,

“திண்ணன் பகலில் வேட்டையாடியும் இரவில் காவல் காத்தும் பொழுதுபோக்கினான். சிவகோசியார் நாள்தோறும் இறைவன் சந்நிதியில் இறைச்சிக் கிடக்கக்கண்டு தூய்மை செய்துவந்தார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. ஐந்தாம்நாள் இரவு, சிவபெருமான் சிவகோசியார் கனவில் தோன்றி, ‘அப்பனே, அவனை வேடனென்று எண்ணாதே. அவன் அன்புக்கு எல்லையில்லை. அவன் மெய்யறிவும் இனிய செயலும் கொண்ட அன்புருவம். நீ சூடிய பூக்களை அவன் காலால் நீக்குவான். அவன் காலடி நமக்கு முருகனின் காலடியிலும் கனிவு தருகிறது. அவன் உமிழும் மஞ்சன நீர் கங்கையிலும் தூயது. அவன் தலைமயிரில் சொருகிவரும் பூ பிரம்மா, திருமால் சாத்தும் பூக்களிலும் புண்ணியமானது. அவன் சுவைத்துப்பார்த்து அளிக்கும் இறைச்சி அவியுணவினும் அரியது. அவன் பேசும் சொற்கள் வேதங்களினும் விழுமியன. அனைத்திற்கும் காரணம் அவனது தூய அன்பே ஆகும். அதனை நீ நாளை நம் பக்கத்தில் மறைந்திருந்து பார் என்றாh.;”

என்று விளக்குகின்றார்.

அறிவு மார்க்கம் என்பதோ பலவகையான மந்திரங்கள் கூறி, முறையான அபிஷேகம், அருச்சனைகள் முதலியன செய்து ஆகம விதிப்படி இறைவனை வணங்குவதாகும். இந்த அறிவு மார்க்கத்தில் பலவகையான யாகங்கள் செய்து ஆகாயத்தில் இருக்கும் இறைவனைப் பஞ்ச பூதங்களின்வழி இறக்கி அருள்பெற்று மகிழ்வர். இதில் இறைவனுக்குப் படைக்கப்படும் நைவேத்தியங்களை முகந்துப் பார்க்கக்கூடக் கூடாது. இத்தகைய அறிவு வழியான பக்தி மார்க்கத்தை மேற்கொண்டு இறைவனின் திருவருளைப் பெற்றவர் சிவகோசியார் என்பதை,

**“பழுது புகுந் தது தீரப்**

**பவித்திரமாம் செயல்புரிந்து**

**தொழுது பெரு வனகொண்டு**

**தூய பூசனைத் தொடங்கி**

**வழும்பவில்திரு மஞ்சனமே**

**முதலாக வரும்பூசை**

**முழுது முறைமையின் முடித்து**

**முதல்வனார் கழல் பணிந்தார்"**

**(பெரியபுராணம் - கண்ணப்பர் பராணம் - பா- 112)**

என்ற பாடல் வரிகளிலும் மற்றும்,

**"பணிந்தெழுந்து தனி முதலாம்**

**பரனென்று பல்முறையால்**

**துணிந்த மறை மொழியாலே**

**துதி செய்து சுடர்த் திங்கள்**

**அணிந்தசடை முடிக் கற்றை**

**அங்கணரை விடை கொண்டு**

**தணிந்த மனத் திரு மனிவர்**

**தபோ வனத்தின்இடை சார்ந்தார்"**

**(பெரியபுராணம் - கண்ணப்பர் பராணம் - பா- 102)**

என்ற பாடல் வரிகளிலும் சேக்கிழார் விளக்குகின்றார்.

இவ்வாறு அன்பு மார்க்கத்திலும் அறிவு மார்க்கத்திலும் இறைவனின் மேல் செலுத்தும் பக்தி, தீமைக்கு அஞ்சி நன்மைபுரிந்து வாழவேண்டும் என்ற எண்ணத்தை மனிதர்களிடம் ஏற்படுத்துகின்றது. பரந்து விரிந்துள்ள இந்த உலகில் மனிதன் சிறந்த வாழ்க்கையை இன்பமாக வாழ்வதற்கு அவனிடம் உள்ள இந்தப் பக்தியே காரணம் என்பது குறிப்பிடத்தக்கது. தன்னுடைய அறிவுக்கு ஏற்பவும், தன்னுடைய வசதிக்கு ஏற்பவும் தான் மேற்கொள்ளும் வழிபாட்டினை அமைத்துக்கொள்ளலாம். இறைவன் என்பவன் நாம் அனைவருக்கும் மேலானவன். நாம் அனைவரும் அவனுக்குக் கீழ்hனவர்கள். டினவே நாம் எந்தவிதமான வழிபாட்டினை மேற்கொண்டாலும் அவற்றை நம் கடவுள் ஏற்றுக்கொள்ளும். நாம் வழிபடவேண்டும் என்பது மடமுமே முக்கியம்.

**ஆன்மாவை வளப்படுத்தும் கல்வி வழிபாடு**

இறைவனின் திருவடியை அடைவதற்காகவே நாம் அனைவரும் பிறவி எடுத்துள்ளோம். ஆனலால் அந்தத் திருவடியைச் சிந்தித்தலும், துதித்தலும், வணங்குதலுமே நம்முடைய முக்கியக் கடமை. உடம்பு நயப்படுவதற்கு உணவும், மனம் நயப்படுவதற்குக் கல்வியும் தேவைப்படுவதைப்

போல ஆன்மா நயப்படவதற்குக் கடவுள் வழிபாடு அவசியம் தேவையாகும். நாம் செய்யும் தொழிலுக்குக் கருவியாக இருப்பது உடம்பு. பொருட்களின் தன்மையை நாம் சரியாக அறிந்துகொள்ள கருவியாக இருப்பது மனம். அனால் இந்த உடம்பும், மனமும் ஆன்மாவின் கருவிகள். எனவே உடம்பை நயப்படுத்துவதற்கு வேண்டிய கல்வியைவிடவும், மனதை நயப்படுத்துவதற்கு வேண்டிய கல்வியைவிடவும் மேலானது ஆன்மாவை நயப்படுத்துவதாகிய கடவுள் வழிபாடு.

நாம் எதை அதிகமாக சிந்திக்கிறோமோ அதில் நமக்கு உறுதியான பற்று உண்டாவது போல கடவுளினிடத்தில் சிந்தனையைச் செலுத்துபவன் கடவுளின் அன்புக்கு உரியவனாகிறான்.

இத்தகைய இறை வழிபாடு என்பது உலகில் பன்னெடுங்காலமாக நடைபெற்றுவரும் புனிதமான செயலாகும். இந்த இறை வழிபாட்டினை மேற்கொள்பவர்கள் மட்டுமல்லாது அவர்களுடைய சந்ததியினரும் குறைவுபடாத செல்வச் செழிப்போடு வாழ்வார்கள் என்பதைத் தொல்காப்பியர்,

**“வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்**
**பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து**
**பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே**
**கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ”**

**தொல்காப்பியம் - பொருளதியாரம் - செய் - நூ-106)**

என்ற நூற்பா வழி சுட்டுகின்றார்.

**வழிபாட்டினால் உண்டாகும் ஒருமைப்பாடு**

இறைவனுடைய அருளைப் பெருவதற்காக மேற்கொள்ளப்படும் இந்த வழிபாடு, தன் பொருட்டுச் செய்யும் தனிமனித வழிபாடு, பிறர் பொருட்டுச் செய்யும் கூட்டு வழிபாடு என்று இரண்டு முறைகளில் மேற்கொள்ளப்படுகின்றது.

தன் பொருட்டுச் செய்யும் தனிமனித வழிபாட்டால் தனிமனித ஒருமைப்பாடு ஏற்படுகின்றது. எப்படி என்றால் இடக்கை மணியடிக்க, வலக்கை மலர் தூவுகிறது. வாய் மந்திரங்களைக் கூற, உள்ளம் இறைவனுடன் ஒன்றி நிற்கிறது. இதே போன்று பிறர்பொருட்டுச் செய்யும் கூட்டு வழிபாட்டிலும் கூட்டுணர்ச்சி உண்டாகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இறைவனை வழிபடுவதினால் தனிமனித வழிபாடும் மக்கள் ஒருமைப்பாடும் ஏற்படுவதைப் போலவே, இயற்கை ஒருமைப்பாடும் உண்டாகின்றது என்பது கூர்ந்து நோக்கத்தக்கது. மத்தளத்தைத் சூடுபடுத்துவதனால் நெருப்புடனும், சங்கு நீரிலிருந்து எடுப்பதனால் நீருடனும், மணி உலோகத்திலும்

(நிலத்திலிருந்து எடுக்கப்படுவது), குழல் காற்றுடன் தொடர்பு கொள்வதாலும் ஓதும் மந்திரம் அண்ட வெளியெங்கும் கேட்பதாலும் பஞ்ச பூதங்களும் இறை வழிபாட்டினால் தூய்மை அடைவதுடன் ஒற்றுமையும் அடைகின்றன.

**ஐம்புலன்களும் பயனடைதல்**

பஞ்ச பூதங்களைப் போலவே இறைவனின் திருமேனியைக் காண்பதால் கண்ணும், அவருடைய திருப்புகழைக் கேட்பதினால் காதுகளும், அவற்றை ஓதுவதால் வாயும், நறுமணப் புகையை நுகருவதால் மூக்கும், திருமேனியை வலம் வந்து தொழுவதால் கைகளும், கால்களும் அவற்றிற்குரிய படைப்பின் பயனை அடைகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இறை வழிபாட்டினால் தனிமனிதனுடைய வாழ்க்கையும், மனித இனத்தினுடைய ஒட்டுமொத்த வாழ்க்கையும், இயற்கையின் தொழிலும் என அனைத்தும் ஒருமைப்பாடு அடைகின்றன என்பதில் எந்தவித ஐயமுமில்லை. எனவே மனத்தூய்மையுடன் பக்தி செழுத்தி, முறையான வழிபாடுகளை மேற்கொண்டு இறைநிலையோடு இணைந்து இன்பமாக வாழ்வோம்.

**முடிவுரை**

ஆரம்பத்தில் பயத்தின் காரணமாக நம்மிடம் தோன்றிய பக்தியானது காலப்போக்கில் நம்முடைய அறிவின் வளர்ச்சியால் இன்று பன்பட்ட நிலையினை அடைந்து சமயம், வழிபாடு என்று விரிந்துள்ளது. பல்வேறு மதத்தவரும் தங்களுக்குத் தெரிந்த முறைகளில் இறைவனை வணங்கினாலும், எல்லா மதங்களும் இறைவனின் பாதங்களிலேயே நாம் அனைவரையும் கொண்டுசேர்க்கின்றது. போகும் பாதைகள் வேறு வேறாக இருந்தாலும் போய் சேரும் இடம் ஒன்றாகவேதான் இருக்கின்றது. உலக உயிரினங்களின் முக்திக்கு வித்தகாக விளங்குகின்ற இந்த கடவுள் வழிபாடானது அறிவு மார்க்கம் என்றும் அன்பு மார்க்கம் என்றும் இரண்டு வகைகளில் சேக்கிழாரால் விளக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு வழிபாட்டுமுறைகளில் அன்புவழிபாட்டையே இறைவன் ஏற்றுக்கொண்டான் என்பதையும் கண்ணப்பர் வழியாக நமக்கு எடுத்துரைககின்றது. எனவே சேக்கிழார் வகுத்த அன்பு மார்க்க வழிபாட்டையே சாமும் மேற்கொண்டு இறைவனோடு இரண்டறக் கழந்து இன்பம் அடைவோமாக.

**துணைநூல் பட்டியல் (Works Cited)**

1. வரதராசன், மு. *தமிழ் இலக்கிய வரலாறு*. சாகித்திய அகாதெமி பதிப்பகம், 1991.
2. இளம்பூரணர், உரையாசிரியர். *தொல்காப்பியம் – பொருளதிகாரம்*. திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 2000.
3. சேக்கிழார். *பெரியபுராணம்*. கங்கை புத்தக நிலையம், 1999.
4. சிவத்தம்பி, கா. [அல்லது பொருத்தமான ஆசிரியர் பெயர்]. *பக்தியும் வழிபாடும்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், [ஆண்டு குறிப்பிடப்படவில்லை].
5. ஞானசம்பந்தன், அ. ச. *பெரிய புராணம்: ஓர் ஆய்வு*. கங்கை புத்தக நிலையம், 1999.